**தலைப்பு 301 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்டோபர் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. லை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ரூபா 1,014,769 க்கான சொத்துக்களை கொள்வனவு செய்தமை நடவடிக்கை செயற்பாட்டின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளை சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ரூபா 1,014,769 க்கான சொத்துக்களை கொள்வனவு செய்தமை தவறுதலாக நடவடிக்கை செயற்பாட்டின் கீழ் காட்டப்பட்டிருந்தது. திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| 2019 யூன் 17 ஆந் திகதிய இலக்கம் 04/2019 மற்றும் 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் 05/2019 கொண்ட வரவு செலவு சுற்றறிக்கை | 2019 ஆம் ஆண்டிற்காக மூலதன செலவுகளில் நூற்றுக்கு 25 சேமிக்க வேண்டி இருந்த போதிலும், 04 மூலதன செலவுகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அமைச்சின் மற்றும் வரவு செலவு திணைக்களத்தின் அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் போ்து இணக்கம் காணப்பட்டவாறு சம்பந்தப்பட்ட செலவின விடயங்களின் ஒதுக்கீடுகளை தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மூலதன செலவுகளில் நூற்றுக்கு 25 க்கான சேமிப்பினை தேவையாகவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் உள்ள கூட்டுறவு சங்கங்களில் 27 சங்கங்களின் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதனை 01 வருடம் முதற் கொண்டு 05 வருடம் காலம் வரையில் தாமதப்படுத்தப்பட்டிருந்தது மேலும், 10 சங்கங்களின் நிதிக் கூற்றுக்கள் பதிவு செய்யப்பட்ட வருடத்தின் பின் எதிர்வரும் கணக்கீட்டு வருடம் முதல் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | கூட்டுறவு சங்க சட்ட மூலத்தின் பிரகாரம், சம்பந்தப்பட்ட நிதி ஆண்டு முடிவடைந்து 03 மாதத்தினுள் பதிவாளரிடம் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றினை சமர்ப்பிப்பதற்கு 02 வருடங்கள் தாமதமான கூட்டுறவு சங்கங்களுக்கு நிதிக் கூற்றுககைள சமர்ப்பிக்கும் படி அறிவித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட 10 சங்கங்களில் 04 செயற்படா சங்கங்கள் ஆகும். ஒரு சங்கத்தினை வேறொரு பெயரில் பதியப்பட்டு உள்ளது. இன்னுமொரு கூட்டுறவு சங்கத்திற்கு நிதிக்கூற்றினை சமர்ப்பிக்கும் படி அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மற்ற சங்கம் தொடர்பாக அச்சங்க அதிகாரிகளை அறிவுறுத்தப்பட்டு உள்ளன. |
| (ஆ) | திணைக்களத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான 68 கூட்டுறவு சங்கங்களில் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 2019 வருடத்திற்கான கணக்குகளை 10 சங்கங்களின் மாத்திரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த 10 கூட்டுறவு சங்கங்களில் 03 சங்கங்களின் கணக்காய்வு அறிக்கைகள் மட்டும் விடுவிக்கப்பட்டு இருந்தன. | சட்ட மூலத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் வருடத்திற்கு ஒரு முறை பதிவாளர் மூலம் கணக்காய்வினை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், கணக்காய்வின் மூலம் வெளிவரும் குறைபாடுகள் பதிவாளரினால் சங்கத்தின் பார்வைக்கு துரிதமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். | 2020.08.31 உள்ளவாறு, 30 கூட்டுறவு சங்கங்கள் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்து உள்ளதுடன் வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் நிதிக் கூற்று குறைபாடுடன் இருந்தமையினால் அதனை சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது. 27 கூட்டுறவு கழக சங்கங்களின் கணக்காய்வுக்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் கொறோனா தொற்று காரணமாக திணைக்களம் |

| | | |
|---|---|---|
| | | மற்றும் சங்கங்களின் அதிகாரிகள் கடமைக்கு சமூகமளிக்காமையினால் இத்தாமதம் நேர்ந்துள்ளமையினை தயவு கூர்ந்து அறியத் தருகின்றேன். |

## 2.2 பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2013 ஏப்ரல் 26 ஆந் திகதிய இலக்கம் அமப/13/0409/540/005 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுறவு கிராமிய வங்கிகள், கிராமிய வங்கிக் கழகங்கள், சனச சங்கங்கள், சனச கழகங்கள் மற்றும் ஏனைய நிதிசாரா கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகளினை ஒழுங்குபடுத்துவதற்காக விசேட ஒழுங்குபடுத்தல் அலகொன்றை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய தாபிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் அலகின் செயற்பாடுகளுக்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 20,997,850 செலவிடப்பட்டிருந்தது. அவ் அலகினை ஆரம்பிக்கப்பட்டு 07 வருடங்கள் கடந்து விட்ட போதிலும், இவ் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக முறையானதொரு | ஒழுங்குபடுத்தல் செயற்பாடு தொடர்பாக முறையானதொரு செயற்திட்டம் திணைக்களத்தினுள் அமுல்படுத்தப்படல் வேண்டும். | 2013 ஆம் வருடம் தொடக்கம் வங்கி ஒழுங்குபடுத்தல் தேசிய அலகு மூலமாக நிதிச்சேவை சங்க அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான செயற்பாட்டினை முறையான திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது. ஆயினும், ஆரம்பகாலத்தில் பணிக் குழுவில் 08 பேர் கொண்ட தேசிய ஒழுங்குபடுத்தல் அலகுக்கு அமைந்த 8000 க்கும் மேற்பட்ட நிதிச்சேவை கூட்டுறவு சங்க ஒழுங்குபடுத்தல், கழக மட்டத்தில் மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பாக பின் விசாரிப்பு செயற்பாடுகளை முறையாக மேற்கொண்டு செல்வது இயலாது போயிற்று. |

| | | | |
|---|---|---|---|
| | வேலைத்திட்டம் திணைக்களத்தினுள் செயற்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஆ) | கூட்டுறவு கிராமிய வங்கிகள் மற்றும் ஏனைய நிதிசார் சேவைகள் வழங்கும் கூட்டுறவு கழகங்களின் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை முறையாக்குவது தொடர்பான சட்டமூலம் ஒன்றினை வரைவு செய்வதனை 2019 ஆம் வருடம் முதற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டு இருந்ததுடன் இன்னமும் அதுவரைவு மட்டத்திலேயே இருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,344,871 க்கான பணம் செலவிடப்பட்டு இருந்தது. | சட்டமூலத்தினை தயாரிக்கும் செயற்பாட்டினை துரிதப்படுத்தல். | தயாரிக்கப்பட்ட சட்டமூல வரைவினை 2020.09.28 ஆந் திகதியன்று கூட்டுறவு சேவை, விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. இச்சட்ட மூல வரைவினை தயாரிப்பதற்காக குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும், சட்டமூல வரைவுக்கு மக்கள் கருத்தினை பெற்றுக் கொள்வதற்கு பத்திரிகைகளின் விளம்பரம் செய்வதற்கும் ஒழுங்கு இணைப்புக்குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும் கணக்கீட்டு கைநூலினை தயாரிப்பதற்காக கலந்துரையாடல் மேற்கொள்வதற்கும் மற்றும் 2019.09.16 ஆந் திகதிய ஒழுங்குபடுத்தல் குழுக் கூட்டத்தினை நடாத்தல் ஆகியவற்றிற்காக 2019 ஆம் ஆண்டு மூலதன செலவு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி நிதிய செலவின் கீழ் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளுக்காக செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 2.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 170 மில்லியன் பெறுமதிவாய்ந்த தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டம் (INFO COOP) 2017 ஆகஸ்ட் ஆரம்பிக்கப்பட்டு இருந்ததுடன் பெறுகை திட்டத்தின் படி இவ் வேலைத்திட்டம் 2019 ஒக்தோபரில் உள்ளவாறு முடிக்கப்பட இருந்தது. அவ்வாறாயினும், கணக்காய்வு திகதியில் உள்ளவாறும் அவ் வேலைத்திட்டத்தின் செயற்பாடுகள் முடிக்கப்பட்டு இருக்கவில்லை. | வேலைத்திட்ட செயற்பாடுகளின் தாமதம் மற்றும் ஆலோசனை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்கள உதவி பணியாளர், தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவி வெற்றிடங்கள் இருக்கின்றமை, தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் திட்டத்தினைக்கு அனுமதி பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் கிரயத்திற்கான அனுமதி கிடைக்காமை திட்டத்தினை தாமதமாக்குவதற்கு காரணங்கள் ஆயின. |
| (ஆ) | சர்வதேச கூட்டுறவுத் தின கொண்டாட்ட செலவிற்காக கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தினால் ரூபா 16,146,654 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இப்பணத்திலிருந்து ரூபா 9,096,553 உபசரிப்பு, தங்குமிட வசதி, எரிபொருள், அச்சிடல் மற்றும் பல தரப்பட்ட அலுவலகங்களுக்காக செலவிடப்பட்டன. ரூபா 4,400,000 கொள்வனவுகளுக்கும் ரூபா 1,263,712 பத்திரிகை விளம்பரங்களுக்காகவும் செலவிடப்பட்டு இருந்தன. அவ்வாறாயினும், கூட்டுறவுத்தள மேம்பாட்டுக்காக ரூபா 1,500,000 மாத்திரம் செலவிடப்பட்டு இருந்ததுடன், அது கூட்டுறவு தின செலவினத்தில் நூற்றுக்கு 09 க்கான ஆகக்குறைந்தது அளவில் இருந்தது. | சர்வதேச கூட்டுறவு தின கொண்டாட்டத்தினை நினைவு கூரும் போது செலவிடப்படும் சார்பினை கூட்டுறவு தளத்தின் முன்னேற்றத்திற்காக இருத்தல் வேண்டும். | உபசரிப்பு, தங்குமிட வசதி ஆகிய செலவினங்களுள், அமைப்பு அலுவலகங்களில் ஈடுபடுபவர்களுக்காக இருப்பு மற்றும் உணவு வசதிகளும், அத்துடன் நாடளாவிய ரீதியில் அதில் பங்குபற்ற வருபவர்களுக்கு உணவு வசதிகள் வழங்குவதற்கும் அதிக செலவு செய்யப்பட்டது. இக்கொண்டாட்டத்திற்காக கூட்டுறவு நிதியத்திலிருந்து ரூபா 11,746,654.00 செலவிடப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டு 96 ஆம் சர்வதேச கூட்டுறவு தின கொண்டாட்டத்திற்கு நிகராக பாடசாலை சிறுவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கப்பட்டன. அதற்காக மக்கள் வங்கியிடமிருந்து அமைச்சின் ஊடாக ரூபா 4,400,000.00 க்கான அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. 2019 வருடம் இதற்கான செலவு செய்யப்பட்டது. |